THE HINDU (TAMIL)

5 FEB 2022

PAGE 3

# பணிபுரியும் இடத்தின் சுற்றுச்சூழலை பேண முயற்சியுங்கள்

- புதுவை பல்கலை. துணைவேந்தர் வேண்டுகோள்

■ புதுச்சேரி

தனிமனிதர்கள் குடும்ப வாழ்வில் மட்டுமில்லாமல், பணியாற்றும் இடங்களிலும் சுற்றுச் சூழலை பாதுகாக்க முயற்சிக்க வேண்டுமென புதுச்சேரி பல்கலைக்கழக துணை வேந்தர் குர்மீத் சிங் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புதுச்சேரி மத்திய பல்கலைக் கழகத்தின் மனித மானுடவியல் உதவி பேராசிரியர் அஜீத் ஜெய்ஸ்வால் எழுதிய 'சுற்றுச்சூழல் மற்றும் தொழில் சார்ந்த நலன்' என்ற நூல்வெளியீட்டு விழா பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

சிறப்பு விருந்தினராக துணைவேந்தர் பேராசிரியர் குர்மீத்சிங் கலந்து கொண்டு நூலினை வெளியிட்டார். அதன் முதல் பிரதியைப் பல்கலைக்கழக கலை மற்றும் கலாச்சாரத்துறை சிறப்பு அதிகாரி பேராசிரியர் ராஜீவ் ஜெயின் பெற்றுக் கொண்டார்.

இந்த விழாவில் துணைவேந்தர் குர்மீத்சிங் பேசுகையில், "கரோனா தொற்று பெருகி வரும் சவாலான காலக்கட்டத்தில் பல்கலைக் கழகப் பேராசிரியரால் சுற்றுச் சூழல் பாதுகாப்புக் குறித்துப் பயனுள்ள புத்தகம் வெளியாகி இருப்பது பெருமைப்படத்தக்கது.

தனிமனிதர்கள் குடும்ப வாழ்வில் மட்டுமில்லாமல் பணியாற்றும் இடங்களிலில் கூட சுற்றுச் சூழலைபாதுகாக்கமுயற்சிக்க வேண்டும். அப்போதுதான் சுற்றுப்புறப் பாதுகாப்பு மற்றும் தனிமனித ஆரோக்கியத்தில் மிகச் சிறந்த தேசமாக இந்தியாவை உருவாக்க முடியும்." என்றார்.

விழாவில் பல்கலைக்கழக மக்கள் தொடர்பு பிரிவு உதவிப் பதிவாளர் மகேஷ் மற்றும் புலமுதன்மையர்கள், துறைத்தலைவர்கள், அதிகாரிகள் மற்றும் மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு நூலாசிரியரை வாழ்த்தினர்.

DINAMALAR

5 FEB 2022

PAGE 2

# புதுச்சேரி பல்கலையில் நூல் வெளியீட்டு விழா

புதுச்சேரி, பிப். 5–

தனிமனிதர்கள் குடும்ப வாழ்வில் மட்டுமன்றி பணியாற்றும் இடங்களில்கூட சுற்றுச் சூழலை பாதுகாக்க அனைவரும் முயற்சிக்க வேண்டும் என, புதுச்சேரி பல்கலை துணை வேந்தர் பேசினார்.

தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழ தொற்று நோயியல் மற்றும் சுகாதாரத்துறையின் இணைப் பேராசிரியர் அஜித் ஜெய்ஸ்வல் எழுதிய 'சுற்றுச்சூழல் மற்றும் தொழில் சார்ந்த நலன்'நூல் வெளியீட்டு விழா, புதுச்சேரி பல்கலையில் நடந்தது.



தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழக இணைப் பேராசிரியர் அஜித் ஜெய்ஸ்வல் எழுதிய நூலை, புதுச்சேரி பல்கலைக்கழக துணை வேந்தர் குர்மீத்சிங் வெளியிட்டார்.

துணை வேந்தர் குர்மீத்சிங் நூலை வெளியிட, பல்கலையின் கலை மற்றும் கலாசாரத் துறை சிறப்பு அதிகாரி ராஜிவ் ஜெயின் பெற்றுக் கொண்டார்.

விழாவில் துணை வேந்தர்குர்மீத்சிங்பேசுகையில், 'கொரோனா தொற்று நோய் பெருகி வரும் இந்த நேரத்தில் பல்கலை பேராசிரியரால் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த புத்தகம் வெளியாகி இருப்பது பெருமைப்படத் தக்கது.

மேலும், தனிமனிதர்கள் குடும்ப வாழ்வில் மட்டுமன்றி பணியாற்றும் இடங்களில்கூட சுற்றுச் சூழலை பாதுகாக்க அனைவரும் முயற்சிக்க வேண்டும்.

அப்போது தான் சுற்றுப்புறப் பாதுகாப்பு மற்றும் தனிமனித ஆரோக்கியத்தில் மிகச் சிறந்த தேசமாக இந்தியாவை உருவாக்க முடியும். அதற்கான வழிமுறைகள் நூலில் விளக்கப்பட்டுள்ளன" என்றார்.

விழாவில் பல்கலை புலமுதன்மையர்கள், துறைத்தலைவர்கள், அதிகாரிகள் மற்றும் மாணவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். நூலாசிரியர் அஜித் ஜெய்ஸ்வல் ஏற்கனவே புதுச்சேரி பல்கலையில் மானுடவியல் துறையில் உதவி பேராசிரியராக பணியாற்றியவர்.